# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.

## S.C.No.163/2018

**Deposition of Witness for : P.W.10**

**Name :** திரு.கங்காதரன்

**Father's Name :** துலுக்கானம்

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 30-6-2023.**

முதல் விசாரணை -

நான் வயலாத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். பேக்கரியில் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன சுரேஷ் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.9 சங்கரை தெரியும். சுரேஷ் இறந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை.

என்னிடம் காட்டப்படும் இரண்டு ஆவணத்தில் உள்ள இரண்டாவது

கையொப்பம் என்னுடையது தான். முதல் கையொப்பம் சங்கருடையது. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆகும். நாங்கள் இருவரும் ஒன்றாக தான் கையொப்பம் போட்டோம். எதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் காவல்நிலையத்தில் போட்டேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

காவல்நிலையத்தில் எதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் கையொப்பம் போட சொன்னதால் போட்டேன். 21.1.2017ல் 2 மணி அளவில் போட்டேன். எதற்காக கையொப்பம் போட்டேன் என்றால் எனக்கு படிக்க தெரியாது. யார் என்னிடம் கையொப்பம் கேட்டது என்றால் போலிசார் கேட்டார்கள். எதற்காக கையொப்பம் கேட்கிறீர்கள் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் கையொப்பம் போட்ட தாளை படித்து காட்ட கேட்டேனா என்றால் கேட்கவில்லை.

என்னை போலிசார் விசாரிக்கும்போது 21-1-2017 பகல் 11.30 மணி அளவில் தூசி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் பதிவு செய்தபோதும் சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண், சாதாரண மண் மற்றும் இருசக்கர வாகனம், தலைக்கவசம் ஆகியவற்றை கைப்பற்றும்போது நானும் சங்கரும் உடன் இருந்து சாட்சி கையொப்பம் போட்டுவிட்டு, தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றவேண்டி பொய்

**சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**<u>இரு தரப்பிலும் குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைக்கப்பட்டது.</u>**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.